# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-97** **தேதி:-22.10.2011.**

## <u>மத்திய சங்க சுற்றறிக்கை எண் 10</u>

அன்பார்ந்த தோழர்களே!

நமது அகில இந்திய சங்கத்தின் சுற்றறிக்கை எண் 10ன் தமிழாக்கத்தை உங்கள் பார்வைக்கும் அமுல் படுத்துதலுக்கும் கீழே வழங்குகிறோம்.

### நவம்பர் 15, 2011 ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்

17.10.2011 அன்று புதுடெல்லியில் கூடிய கூட்டு நடவடிக்கைக் குழு 15.11.2011 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தம் நடத்திட ஏக மனதாக முடிவு செய்துள்ளது. முதலில் 10.10.2011 அன்று வேலை நிறுத்தம் செய்திடத்தான் முடிவு செய்யப்பட்டு இருந்தது. எனினும் NFTE சங்கம் தாங்களும் வேலை நிறுத்தத்தில் இணைய விருப்பம் தெரிவித்து வேலை நிறுத்த தேதியினை மாற்றி வைத்திட விருப்பம் தெரிவித்து இருந்தது. அதற்கு பின் NFTE சங்கம், அதன் மத்திய செயற்குழுவில் முடிவு எடுப்பதற்கு வசதியாக கூட்டு நடவடிக்கைக் குழு வேலை நிறுத்தத்தை ஒத்தி வைக்க முடிவு செய்தது. இறுதியாக அனைவரையும் கலந்தாலோசித்து 15.11.2011 என வேலை நிறுத்த தேதி முடிவு செய்யப்பட்டது. மாநில, மாவட்ட கிளை சங்கங்கள் கூட்டு நடவடிக்கைக் குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் அணுகி இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம்.

### ஒரு நாள் வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகள்

- போனஸ் வழங்க வேண்டும்(PLI)
- 78.2% பஞ்சப்படி இணைப்பு
- மருத்துவப்படி, விடுமுறையை காசாக்குதல், LTC ஆகியவற்றை மீண்டும் வழங்குதல்.
- ITS அதிகாரிகளை BSNLல் இணைத்தல்
- வாங்கும் அடிப்படை ஊதியத்தில் ஓய்வூதிய பகுதிப்பணம் வழங்குதல்.
- ஸ்பெக்ட்ரம் கட்டணமாக வழங்கப்பட்ட 8,313 கோடி ரூபாயை BSNLக்கு வழங்க வேண்டும்.
- உரிமக்கட்டணத்தை திரும்ப வழங்க வேண்டும்.
- 3G ஸ்பெக்ட்ரம் வாங்க வட்டங்களை தீர்மாணிக்கும் பொறுப்பு வழங்க வேண்டும்.
- உத்தேசக்கடனுக்காக BSNL இடம் இருந்து வாங்கப்பட்ட 7,500 கோடி ரூபாய்களை வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டும்.
- தொலைத் தொடர்பு ஆலோசனைக் குழுக்களை நிறுத்த வேண்டும்.
- கிராமப்புற சேவைகளுக்கு முழு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

## 2011, நவம்பர் 8ஆம தேதி- சிறை நிரப்பும்/சத்தியாகிரக போராட்டம்.

மத்திய தொழிற்சங்கங்கள் நவம்பர் 8ஆம் தேதி கீழ் கண்ட கோரிக்கைகளுக்காக சத்திய கிரக/சிறை நிரப்பும் போராட்டத்திற்கு அறை கூவல் விட்டுள்ளன. மாநில/ மாவட்ட செயலாளர்கள் நமது ஊழியர்களையும் இந்த போராட்டத்தில் ஈடுபடுத்திட வேண்டும். கூட்டாக இந்த போராட்டங்கள் நடத்திடும் இடங்களில் நமது தோழர்கள் அந்த போராட்டத்தில் அந்த போராட்டங்களில் கலந்துக் கொள்ள வேண்டும். மற்ற இடங்களில் நமது தோழர்கள் சத்தியாகிரக போராட்டத்தினை நடத்திட வேண்டும்.

### கோரிக்கைகள்

- முன்னேப்போதும் கண்டிராத விலை வாசி உயர்வுக்கு எதிராகவும், ஒருங்கிணைந்த பொது விநியோக முறையை அமுல் படுத்திட வலியுறுத்தியும்.
- அனைத்து தொழிலாளர் நல சட்டங்களையும் கண்டிப்புடன் அமுல்படுத்திட வேண்டும்.
- வேலை வாய்ப்பை உருவாக்கவும் பாதுகாத்திடவும் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ஒப்பந்த, தற்காலிக, அணி திரட்டப்படாத தொழிலாளர்கள் நலன்களுக்காக வழங்குவதற்கு மத்திய நிதி வழங்குவதற்காக அனைவரும் தகுதி பெறும் வகையில் உள்ள தடைகளை நீக்கும் பொருட்டு அணி திரட்டப்படாத தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு சட்டம் 2008ல் தேவையான மாறுதல்களை கொண்டுவர வேண்டும்.
- லாபமீட்டும் பொதுத் துறை நிறுவன பங்குகள் விற்பதை எதிர்த்தும், பொதுத் துறைகளின் விரிவாக்கத்திற்கும், நலிவடைந்த் பொதுத் துறை நிறுவனங்களை புனரமைப்பதற்கும் பொதுத்துறை நிறுவனங்களின் சேமிப்பு மற்றும் உபரி நிதிகளை முதலீடு செய்ய வேண்டும்.
- நிரந்தர/ தொடர்ச்சியான பணிகளை ஒப்பந்தமயமாக்க கூடாது. ஒப்பந்த ஊழியர்களுக்கு அந்தந்த நிறுவனங்களில் உள்ள நிரந்தர ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கிட வேண்டும்.
- குறைந்த பட்ச மாத ஊதியம் ரூ.10,000/-க்கு குறையாத வகையில் குறைந்த பட்ச கூலி சட்டத்தில் தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும்.
- போனஸ் மற்றும் EPF க்கு உள்ள வரையறைகளை ரத்து செய்ய வேண்டும். பணிக்கொடையின் அளவை உயர்த்த வேண்டும்.
- அனைவருக்கும் உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியம் வழங்க வேண்டும்.
- தொழிற்சங்கங்களை 45 நாட்களுக்குள் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும். ILO கருத்தரங்க எண்கள் 87 மற்றும் 98ஐ அமுல்படுத்திட வேண்டும்.

## கையெழுத்து இயக்கம் மற்றும் 25.11.2011 பாராளுமன்றம் நோக்கிய பேரணி

22.07.2011 அன்று புது டெல்லியில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கத்தில் ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணைய மசோதாவிற்கு எதிராக நாடு தழுவிய கையெழுத்து இயக்கத்தை நடத்த முடிவு செய்துள்ளது. ஊழியரகளிடம் மட்டும் அல்லாமல் பொதுமக்களிடமும் இந்த கையெழுத்து இயக்கத்தை நடத்திட வேண்டும். இந்த மசோதாவை

பாராளுமன்றத்தில் நிறைவேற்றி ஓய்வூதியம் வழங்குவதை தனியார் மயமாக்கிட அரசு முயற்சிக்கிறது. தற்போது ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியமும் இதனால் ஆபத்திற்கு உள்ளாக உள்ளது. எனவே அனைத்து மாநில/மாவட்டசெயலர்களும் இந்த கையெழுத்து இயக்கத்தை அதிமுக்கிய பணியாக கருதி நடத்திட வேண்டும். இவ்வாறு பெறப்படும் கையெழுத்துக்களை மத்திய சங்கத்திற்கு நவம்பர் 20ஆம் தேதிக்குள் வந்து சேரும் படி அனுப்பி வைக்க வேண்டும்.

இந்த மசோதாவை எதிர்த்தும் ஓய்வூதிய தனியார்மயமாக்கலை எதிர்த்தும் 25.11.2011 அன்று பாராளுமன்றம் நோக்கிய பேரணி நடைபெற உள்ளது. இந்த மசோதாவிற்கு எதிராக பெறப்பட்ட கையெழுத்துக்களை பாராளுமன்ற சபாநாயகரிடம் வழங்கப்பட உள்ளது. மாவட்ட/மாநில செயலர்கள் இந்த பேரணிக்கு அதிக பட்ச ஊழியர்களை திரட்டிட வேண்டும். டெல்லிக்கு அருகில் உள்ள மாநிலங்கள் அதிக அளவில் இந்த பேரணிக்கு ஊழியர்களை திரட்டிடவேண்டும்.

**<u>கட்டிட நிதி-விளம்பரங்களை திரட்டிடுக</u>**

ஏற்கனவே தெரிவித்த படி, புது டெல்லியில் மேற்கு படேல் நகரில் ஒரு கட்டிடத்தை வாங்கிட நமது மத்திய சங்கம் ஒரு ஒப்பந்தத்தை போட்டுள்ளது. கட்டிடத்தின் மதிப்பு 2.90கோடி ரூபாய்கள். கட்டிட பதிவு மற்றும் அதற்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கு சேர்ந்து 3.20 கோடி ரூபாய்கள் தேவைப்படும். இதுவரை மத்திய சங்கத்திற்கு வந்து சேர்ந்த நிதி ரூபாய் 1.72 கோடி ரூபாய்கள் மட்டுமே. மீதமுள்ள தொகையினையும் நாம் திரட்டிட வேண்டும். நமது கட்டிட திறப்பு விழா தேதியான 2011 டிசம்பர் 11ஆம் தேதி அன்று ஒரு மலர் வெளியிட நமது மத்திய சங்கம் முடிவு செய்துள்ளது. இதற்காக ஒவ்வொரு மாவட்ட சங்கமும் குறைந்த பட்சமாக ரூ.5,000/- விளம்பரம் பெற்றுத் தர வேண்டும். மாவட்ட செயலர்கள் நமது சந்தாதாரர்கள், தொலைத் தொடர்பு கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளிட்டவர்களிடம் இருந்து இந்த விளம்பரங்களை பெற்றுத் தர வேண்டும். மாநில/ மாவட்ட செயலர்கள் அதிகப்படியான முயற்சிகள் மேற்கொண்டு விளம்பரங்களை பெற்று மத்திய சங்கத்திற்கு அனுப்பிட வேண்டும் என மத்திய சங்கம் கேட்டுக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்

தோழமையுள்ள,

**/S.செல்லப்பா/**

மாநில செயலாளர்.